# இலங்கையில் முஸ்லிம் திருமணத்தில் மணக்கொடை: அநுராதபுர மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு

# THE SIGNIFINCE OF DOWER IN MUSLIM MARRIAGES IN SRI LANKA: A STUDY BASED ON ANURADHAPURA DISTRICT

Nusrath Jahan M.I., Sarjoon R.A. and Rushana A.
Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil
Correspondence: sarjoonra@seu.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வு அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் திருமணத்தில் மணக்கொடை தொடர்பான நடைமுறைகளை அடையாளப்படுத்தல், குறித்த பிரதேசவாசிகளிடம் அது எந்தளவு முக்கியத்துவம் பெறுகிறது எனும் இரண்டு பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நோக்கங்களை அடைந்துக் கொள்ளும் நோக்கில் சுமார் 130 வினாக்கொத்துகள் அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கெகிராவை மற்றும் பஹலகம பிரதேசங்களில் விநியோகம் செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு இரண்டாம் நிலைத்தரவுகளும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி தரவுகள் SPSS மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. பெறுபேறுகளின் படி, மணக்கொடை பெண்களால் வேண்டப்படுவதோ அல்லது ஆண்களால் அதன் தொகை பற்றி பெண்தரப்பாரிடம் வினவப்படுவதோ நடைமுறையில் இல்லை. எனினும் குறித்த பிரதேச மக்களின் திருமணத்தில் மணக்கொடை முக்கியத்துவம் பெற்று விளங்குவதோடு, மணப்பெண்ணுக்கு ஓர் ஆண் அதைக் கொடுப்பது கடமை என்கின்ற உணர்வு காணப்படுகிறது. ஆய்வுப் பிரதேச மஹர் நடைமுறைளை இஸ்லாத்தின் பார்வையில் பரிசீலனை செய்த போது குறித்த நடைமுறைகள் இஸ்லாமிய போக்கிலிருந்து குறிப்பிடத்தக்களவு விலகியிருந்தமை ஆய்வில் அவதானிக்கப்பட்டது.

**திறவுச் சொற்கள்** : இலங்கை, அநுராதபுரம், கெகிராவை, முஸ்லிம் திருமணம், மணக்கொடை

## 1. ஆய்வுப் பின்னணி

ஆசியாக் கண்டத்தில் இலங்கை இயற்கை அழகுமிக்க ஒரு நாடாகும். இது இந்து சமுத்திரத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கீழ்க் கரைக்கு அப்பால் அமைந்துள்ளது. இத்தேசத்தை இந்து சமுத்திரத்தின் முத்து எனவும் அழைப்பர். இச்செழிப்பு மிக்க நாடானது 65610 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு ஏறத்தாள 20 மில்லியன் மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இது பல்லின, பல்சமயத்தைப் பின்பற்றுவோர், பல்கலாசாரத்தையுடையோர், பல்மொழி பேசுவோர் வாழ்ந்து வரும் ஒரு தேசமாகும். இது சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளித் தமிழர், பறங்கியர், இலங்கைச் சோனகர், மலாயர், ஆபிரிக்கர் மற்றும் பூர்வீகக் குடிகளான ஆதிவாசிகள் ஆகியோரின் தாயகமாகும்.

மேலும் இலங்கை நாடானது 9 மாகணங்களையும் அத்துடன் 25 நிருவாக மாவட்டங்களையும் கொண்டுள்ளது. அவற்றில் அநுராதபுர மாவட்டம் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ளதோடு நில ரீதியாக மிக விசாலமானதுமாகும். அநுராதபுரம் வடமத்திய மாகாணத்தின் தலைநகராகும். சுமார் 7 பாராளுமன்றத் தொகுதிகள், 694 கிராம சேவகர் பிரிவுகள், 19 பிரதேசசபைகள், 1 நகரசபை, 22 பிரதேச செயலாளர் பிரிவுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இம்மாவட்டம் அமைந்துள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் பௌத்தர், இந்துக்கள், முஸ்லிம், கிறிஸ்வர் ஆகிய பல் சமயங்களைப் பின்பற்றுவோர் வாழ்ந்து வாழ்கின்றனர். கெகிராவைப் பிரதேச சபையின் 628வது கிராம சேவகர் பிரிவினுள் உள்ளடங்குகின்ற கெகிராவை நகரம் மற்றும் 643வது கிராம சேவகர் பிரிவில் உள்ளடங்கும் பஹலகம எனும் பிரதேசங்கள் இவ்வாய்வின் எல்லைகளாகக் கொண்டு மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. கெகிராவைப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 1405 பேரில் முஸ்லிம்கள் சுமார் 782 (441 ஆண்கள் 341 பெண்கள்) ஆகும். பஹலகமையில் 220 முஸ்லிம் பெண்களும் 241 முஸ்லிம் ஆண்களுமாக மொத்தம் 461 வாழ்கின்றனர்.

இஸ்லாம் அனைவருக்கும் பொதுவான உன்னத மார்க்கம் என்ற வகையில் இம்மை, மறுமை வரை மனிதனுக்கு வழிகாட்டும் பூரண மார்க்கம். அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டுவது போல மனிதனுடைய வாழ்வு முழுவதிற்குமான வழிகாட்டல்களை அது வழங்குகின்றது. இவ்வகையில் குடும்பம் என்ற நிறுவனத்தில் முக்கியமான இடத்தைப் பெறும் திருமணத்திற்கும் வழிகாட்டுகின்றது. மனித வாழ்வில் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளில் ஒன்றாக திருமணம் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இஸ்லாம் கூறும் திருமணத்தில் முக்கியமாக பேணப்படும் அம்சமாக மணக்கொடை (மஹர்) காணப்படுகின்றது. மணக்கொடை என்பது மணமகன் மணமகளுக்குக் கொடுக்கும் கட்டாயக் கொடுப்பனவாகும். இது கருத்திற் கொள்ளப்படாத போது திருமணம் செல்லுபடியற்றதாகவும் வலுவற்றதாகவும் மாறிவிடுகின்றது. அத்துடன் மஹர் என்பது மணக்கொடை என அழைக்கப்படுகின்றது. மணமகன் சார்பாக மணமகளுக்கு வழங்கப்பட வேண்டிய பெண்ணின் உரிமையே மஹர் எனக் கூறப்படுகின்றது. இத்தொகை ஒரு பெண் திருமணத்தின் பின் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உதவ முடியும்.

‘‘மேலும் நீங்கள் திருமணம் செய்யும் பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹர் தொகையை கடமையெனக் கருதி மனமுவந்துக் கொடுத்து விடுங்கள்.’’ (அல்குர்ஆன் 4:4)

கெகிராவை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாம் பற்றிய போதிய அறிவு காணப்படாமை, அந்நியக் கலாசாரத் தாக்கத்தின் செல்வாக்கு, பழைமை போற்றும் பண்பு, மேற்கு கலாசார ஊடுருவல் மற்றும் சிந்தனைப் போக்கு, நவீன கல்வி வளர்ச்சி, நவ நாகரிகம் மற்றும் நவீனத்துவம் என்பன ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் என்பவற்றினால் பெரும்பாலான முஸ்லிம்களின் நடத்தைகள் இஸ்லாத்திற்கு புறம்பானவைகளாக அமைந்திருப்பதோடு அவை திருமண விவகாரங்களிலும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்துள்ளன. அந்த வகையில் திருமணத்தின் போது மணக்கொடை வழங்குவதில் முஸ்லிம் ஆண்கள் கரிசனை காட்டாதிருத்தல், அதன் தொகையின் அளவில் கவனம் செலுத்தாதிருத்தல், மணக்கொடை வழங்கப்படாதிருத்தல், பெண்கள் மனக்கொடையைக் கேட்டுப் பெறும் உரிமை மறுக்கப்பட்டிருத்தல் போன்றன மேற்படி ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கப்படும்

மணக்கொடை தொடர்பான பிரச்சினைகளாகும். இப்பிண்ணனியில் 'இலங்கை முஸ்லிம் திருமணத்தில் மணக்கொடை: அநுராதபுர மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு' எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. கெகிராவை மற்றும் பஹலகம பகுதிகளில் இடம் பெற்று வரும் மஹர் நடைமுறைகள் எவ்வாறு காணப்படுகின்றன, மணக்கொடைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் யாது எனும் இரு பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. எனவே, ஆய்வுப் பிரதேசத்தில் நிலவும் மஹர் நடைமுறை மற்றும் அதன் முக்கியத்துவத்தைக் கண்டறிவதனூடாக எதிர்காலத்தில் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் மற்றும் பல ஆய்வுகளுக்கு பயனளிக்க ஏதுசெய்தல் இவ்வாய்வை மேற்கொள்வதின் நோக்கமாகும்.

## 2. இலக்கிய மீளாய்வு

மேற்படி தலைப்பில் தேசிய ரீதியிலும் சர்வதேச அளவிலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் படி ஸலீம் (1997) என்பவர் எழுதிய ''அக்கரைப்பற்று வரலாறு'' எனும் நூலில் அக்கரைப்பற்று முஸ்லிம்களது கலாசார அம்சங்களில் ஒரு பகுதியாக திருமண முறைகள் பற்றிக் விளக்கியுள்ளார். இதில் மஹர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று மக்களிடையே பெண்ணுக்குரிய 'மஹர்' என்னும் தொகை மாப்பிள்ளையால் கொடுக்கப்படுகிறது என இதில் கண்டறியப்பட்டுள்ளது.

அமீன் (2000) என்பவர் எழுதிய ''இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்'' எனும் நூலில் இலங்கை முஸ்லிம்களின் விவாகப் பதிவு பற்றி கூறியுள்ளார். இதில் கடுத்தங்கள் என்பது விவாகப் பதிவை நிறுவும் ஆவணமாக இருந்தது. இலங்கையில் மணப்பெண் சார்பாக வழங்கப்பட்ட சீதனத்தை பதியும் உறுதியாகவும் மஹர் தொகைப் பற்றிய பதிவாகவும் இவ் ஆவணம் பயன்படுத்தப்பட்டதாகக் கூறியிருப்பதனூடாக மஹர் இலங்கையில் வழங்கப்பட்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

Kristen Cherry (2001) என்பவர் எழுதிய ''Marriage and Divorce Law in Pakistan and Iran: The Problem of Recoginition'' எனும் ஆய்வுக்கட்டுரையில் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாடுகளில் காணப்படும் திருமண சட்டங்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. இதில் மஹர், விவாகரத்து பற்றிய தகவல்கள் வந்துள்ளன. இவ்விரு நாடுகளும் முஸ்லிம் நாடுகளாகக் காணப்பட்ட போதிலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் திருமணம் தொடர்பான சட்டங்கள் மாற்றப்பட்டு விட்டன. இந்நாடுகளில் திருமணத்தில் பெண்களுக்கு மஹர் வழங்கப்படும் முறை காணப்படுகிறது. மேலும் மஹரின் அளவானது கணவனின் வருமானத்திற்கேற்ப மாறுபடுவதுடன் பெண்ணின் பாதுகாப்புக்கு உத்தரவாதமாகவும் இத்தொகைக் காணப்படுகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

John selser, Judge New Jersey Superior Court (2002)''Islamic Family Law in American courts : A Rich, Diverse and Evolving Jurisprudence'' எனும் ஆய்வறிக்கையில் திருமணச் சட்டங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா நீதிமன்றங்களில் மஹர் என்பது இரண்டு சம்பந்தபட்டவர்களுக்கும் இடையிலான ஒரு எளிய ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. இதில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. சமுதாயத்தின் சட்டத்திற்கோ அல்லது நலன்களுக்கோ ஒரு பழக்கமாக இருந்து வருகிறது. மேலும் முஸ்லிம் சமுதாயத்திற்கு தனித்துவமானதாகவும் காணப்படுகிறது. இஸ்லாமியக் குடும்பச் சட்டம் அமெரிக்க நீதிமன்றங்களில் ஒரு வளமான, மாறுபட்ட மற்றும் உருவாகிவரும் நீதிபோதனையாகும். மேலும் அமேரிக்கா நீதிமன்றமானது ஒரு எளிய ஒப்பந்தமாக முஸ்லிம் திருமண ஒப்பந்தத்தைக் கருதுகிறது. அத்துடன் முஸ்லிம் திருமணத்திற்குத் தேவைப்படும் எல்லா விடயங்களையும் கொண்டுள்ளது. முஸ்லிம் திருமணத்தில் 600 ஆயிரம் டொலர்கள் செலவழிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மஹரானது முஸ்லிம் திருமணத்தில் கட்டாயமாகக் காணப்படும் விடயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மேலும் அமேரிக்கா நீதிமன்றத்தில் மஹர் தொடர்பான சட்டவிதிகள் காணப்படுகின்றன. அத்துடன் இங்கு திருமண ஒப்பந்தத்தில் மஹர்

ஏற்பாடு என்பது பிரசவ உடன்பாடு அல்ல மாறாக ஊக்கத் தொகை உடன்பாடு ஆகும். மணமகன் மற்றும் மணமகள் இடையே எழும் அனைத்து நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும். விவாகரத்திற்குப் பின் அல்லது கணவனின் இறப்பிற்குப் பின் தம் வாழ்வைக் கொண்டு செல்ல முன்கூட்டிய உடன்படிக்கையின் நிதி முறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மஹர் என்பது கணவனைப் பொறுத்தவரை ஒரு பொறுப்பாகவும் மனைவி பெறும் உரிமையாகவும் கொள்ளப்படுகிறது என இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

Lindsey E. Blenkhorn (2002) என்பவர் எழுதிய ''Islamic Marriage Contracts in American Courts: Interpreting Mahr Agrements as Prunuptials and Their Efect on Muslim Women'' எனும் ஆய்வுக் கட்டுரையில் அமெரிக்காவில் திருமணம், மஹர், விவாகரத்துப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. மஹர் உடன்படிக்கைகளை தள்ளுபடி செய்ய முடியாத ஒன்றாகும். மேலும் மஹர் விவகாரங்களைச் செயற்படுத்துதல், சமூக உரிமையாளரின் கீழ் விவாகரத்துச் செய்யும் மனைவிக்கு பணம் செலுத்துதல் போன்றவற்றை அமேரிக்கா சட்டம் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் இங்கு மஹரானது கணவன் மீது ஒரு பயனுள்ளக் கட்டுபாடாகக் காணப்படுகிறது. அத்துடன் அமேரிக்கா நீதிமன்றங்களில் மஹர் உடன்படிக்கைகளை முன்கூட்டியே பேசுகையில் இருவரும் புறக்கணிக்கிறார்கள். என்றும் அமேரிக்காவில் முஸ்லிம் பெண்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதில் இருந்து விலக்களிக்கப்படுவதில்லை. மஹரானது அவர்களது சமூகச் சொத்தாகவே கணிக்கப்படுகிறது. அத்துடன் மஹரானது விவாகரத்து பெற்று சென்றபின் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மனைவிகளுக்கு ஈடு கொடுக்கிறது. பெண்கள் கைவிடப்படுவதைக் காப்பாற்றுவதற்காக விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்றாக மஹர் காணப்படுகிறது. இது விவாகரத்தின் போது நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும் ஒத்திவைக்கப்பட்ட மஹர் பற்றி கூறப்பட்டுள்ளது. மேற்கத்தேயத்தில் மஹர் ஒரு பிரபஞ்ச விலைவாசி அல்ல. அதாவது தந்தை அல்லது காப்பாளரிடம் பணம் செலுத்துவது என்பது தடைசெய்யப்பட்டது. பெண்ணிடமே மஹர் அளிக்கப்படுகிறது. பலஸ்தீனியப் பெண்கள் மஹரை முக்கியமானதொன்றாகக் கருதுகிறார்கள். இதன் மூலம் பெண்கள் சொத்துக்களைப் பெறுகிறார்கள். ஒத்தி வைக்கப்பட்ட மஹர் மூலம் பெண்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது ஆகிய விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

Kamrul Hossain (2003) என்பவர் எழுதிய ''In Search of Equality: Marriage Law For Muslim Women In Bangladesh'' இவ் ஆய்வில் பங்களாதேசத்தில் சீதனத்தை துணியளவும் மதிப்பதில்லை. நடைமுறையில் நோக்கும் போது கல்வியறிவில்லாத அதிகளவிலான கிராமத்தில் சீதனம் மணப்பெண்ணின் பெற்றோரிடமிருந்து பெறப்படுகிறது. பங்களாதேசத்தில் சீதனம் பெரிய குற்றமாக கருதப்படுகிறது. அதனால் சீதனத்தை எழுத்து வடிவில் பெறப்படுவதில்லை மாறாக சீதனம் வாய் மொழி மூலமாக பெறப்படுகிறது. இதனால் பெண்ணின் சமத்துவம் பாதிக்கப்படுகிறது. அத்துடன் இப்பிரதேசத்தில் மஹர் தொகை எவ்வளவு வேண்டுமானாலும் பெறப்படுகிறது எனவும் ஆண்கள் சீதனத்தை மஹரை விட அதிகமாக எடுக்கிறார்கள். இதனால் பெண்கள் சுதந்திரமில்லாத் தன்மைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இருந்தாலும் மஹருக்கான குடும்பச் சட்டம் 1961இல் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மஹரானது இரண்டு முறைகளில் வழங்கப்படுகிறது. ஒன்று திருமணத்திற்கு முன்பு, இரண்டு திருமணத்திற்கு பின்பு. விவாகரத்து, இறப்பு போன்ற சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகின்றன. 1969 ஆம் ஆண்டு சட்டத்தின் பின் திருமணத்திற்கு முன்பே மஹரின் தொகை கொடுக்கப்படுகிறது. விவாகரத்தை ஒரு பெண் கோரினாலும் மஹரைக் கேட்டெடுத்ததன் பின்பு விவாகரத்து பெறப்படுகிறது ஆகிய அம்சங்கள் கண்டறியப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

Ayesha M. Imam (2005) என்பவர் எழுதி ''Women Right in Muslim Law'' எனும் ஆய்வில் சில நாடுகளில் காணப்படும் மஹர் தொடர்பான நடைமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன. எகிப்தில் பெண்கள் மஹரை தங்களாகவே நிர்ணயிக்கும் உரிமை காணப்படுகிறது. பகிஸ்தானில் குறிப்பிட்ட மஹர் தொகைக் கொடுக்கப்படும் வழக்கம் காணப்பட்டுகிறது. எனினும் சமுதாயத்துக்கு சமுதாயம் விதவைகள் வித்தியாசமான அளவுகளில் மஹர் தொகைக் கோருவதைக் கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது. நைஜீரியாவில் பெண்களுக்கு தங்களது மஹர் தொகையில் கலந்தாலோசித்து முடிவு செய்வதற்கான உரிமை உண்டு என்பதை

அவர்கள் அறிந்திருப்பதில்லை. அத்துடன் மஹர் தொகையானது அடிக்கடி குடும்பத்துக்கிடையில் பறிமாற்றக் கூடிய பரிசாகக் காணப்படுகிறது. மேலும் ஈரானில் பெண்களுக்கு வேண்டுமென்று தாமாகவே மஹரினை எத்தி வைக்க முடியும். எனினும் இது கடனாகக் கொள்ளப்படுவதனால் ஆண்கள் கட்டாயமாக விவாகரத்துக்கு முன்பு இதனைச் செலுத்த வேண்டும். இந்தியாவில் பெண்களின் உரிமைகள் படிப்படியாகக் குறைக்கப்படுவதால் அவர்களது மஹர் உரிமையும் ஒரளவே நடைமுறைப்படுத்தப்படுகிறது. கென்யாவில் மனிதனின் தோற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு மஹர் வழங்கப்படுகிறது உதாரணமாக வெள்ளையான தோற்றமுடைய மணப்பெண்ணுக்கு மஹர் தொகை அதிகமாக வழங்கப்படுகிறது. காம்பியா நாட்டில் மணமகள் தனக்கு சொந்தமான மஹர் தொகையை நிர்ணயிக்கும் உரிமை வழந்குவதில்லை. அதாவது வெறுமனே மஹரானது பரிமாற்றக் கூடிய ஒரு பரிசுத் தொகையாகக் கொள்ளப்படுகின்றது போன்ற மஹர் தொடர்பான அமசங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

Women Living Under Muslim Law (2006) ''Knowing Our Rights'' எனும் ஆய்வானது சவுதி அரேபியாவில் மஹர் பற்றி ஆராய்ந்துள்ளது. சவுதி அரேபியாவில் மஹர் பெண்ணின் சொந்த தேவைக்குப் பயன்படுத்துவதை கண்டறிந்துள்ளது. மேலும் மஹரானது பணமாக, தங்கமாக திருமண நேரத்தில் கொடுக்கப்படுவதாகவும் இத்தொகையை பெண் விரும்பிய வழியில் செலவழிக்கவும் உரிமை அளிக்கப்படுகிறது. அத்துடன் மஹர் வழங்கப்படும் பொருட்களான தங்கம், தொட்டுணரும் பொருட்கள் திருமண நேரத்தின் போது விருந்தாளிகள் முன்னிலையில் காட்சிப்படுத்தப்படுகிறது. அத்துடன் மஹரானது பொருளாதார ரீதியில் கைமாற்றப்படும் கருவி இல்லை என்றும் மஹர் பெறுமதி தீர்மானிக்கப்படுவது மணமகனின் நிதிரீதியான தரத்தைப் பார்த்தாகும். மேலும் மஹர் என்பது வருங்கால மணமகளின் நிதிச்சுதந்திரத்தைப் பிரதிபலிக்கும் வழிமுறையாகவும் காணப்படுகிறது. அத்துடன் மஹர் விவாகரத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு ஆண் ஒரு பெண்ணை தனது சுயவிருப்பின்படி விவாகரத்து செய்ததன் பின்பு மீண்டும் அதே பெண்ணுடன் இணைய வேண்டுமெனின் புதிதாக மஹர் கொடுத்து திருமணம் புரியும் முறையும் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் சவுதி அரேபிய பெண்கள் மஹர் அளவைக் குறைக்க விரும்புவதில்லை எனவும் இனங்கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஜித்தாவில் மஹர் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. திருமண முறைகள் வித்தியாசமாக்கப்பட்டுள்ளன. எனினும் மஹர் முக்கிய விடயமாக காணப்படுகிறது. இங்கு மணமகளின் குடும்பப் பிண்ணனியை வைத்து மஹரின் அளவு தீர்மானிக்கப்படுகிறது எனவும் சரியான திருமணத்திற்கு அடித்தளம் வகிப்பது மஹராகவும் கொள்ளப்படுகிறது. அத்துடன் மஹரானது இரண்டு முறைகளில் வழங்கப்படுகிறது. மணமகன் மணமகளின் ஆசனத்திற்காக கொடுக்கப்படுகிறது. இது சில வேளை மணமகளின் வீட்டாரின் வேண்டுக் கோளுக்கிணங்கவும் இத்தொகை வாங்கிக் கொடுக்கப்பட்டு மணமகளின் பேரில் பதிவு செய்யப்படுகிறது. அடுத்த முறையாக மஹரானது எப்போதும் கொடுக்கலாம் இதற்கு விதிவிலக்கு இல்லை. எனினும் ஆண் விவாகரத்துக் கோரினால் மீதமுள்ள மஹர் தொகையை பெண்ணுக்கு வழங்கப்படும் போன்ற மஹர் தொடர்பான அம்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

Orzala Ashraf Nemet (2006) என்பவர் எழுதிய ''Comparative Analysis of Family Law in the Context of Islam'எனும் ஆய்வில் ஆப்கானிஸ்தான், பகிஸ்தான், பங்களாதேசம் போன்ற நாடுகளில் காணப்படும் இஸ்லாமிய சட்டம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதில் திருமணம், மஹர், விவாகரத்து மற்றும் பலதாரமணம் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் தந்தை திருமண விடயங்கள் பற்றி கலந்துரையாடும் போது மஹர் பற்றியும் விவாதிப்பார். அத்துடன் பெண்கள் மிக உயர்ந்த தொகையையை மஹராகச் செலுத்தும் ஆண்களையே தேடுகின்றனர். இதன் மூலம் பெரிய அளவில் மஹர் வழங்கப்படுகிறது. எனினும் ஆண்கள் குறைந்தளவில் மஹர் தொகையைப் பெறும் பெண்களையே தேடுகின்றனர். மேலும் ஆப்கானிஸ்தானில் இத்திருமணப் பரிசு பாதுகாப்பான திருமணத்திற்கு அத்திவாரமிடுவதுடன் சமுதாயத்துக்குள் அத்திவாரமும் இடுகிறது. பங்களாதேசத்தில் சீதனம் பெற்று திருமணம் பெறும் முறை காணப்படுகிறது மஹர் நடைமுறை சிறிய அளவிலே உள்ளது. பகிஸ்தானில் முஸ்லிம் குடும்பக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மஹரை பாதுகாப்பதற்காக திருமணச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. திருமணத்தின் பின் சிறந்த வாழ்வை உறுதி செய்ய திருமணத்தின் போது மஹர் வழங்கப்படுகிறது.

கணவன் மனைவியிடம் இருந்து மஹரை எடுக்கும் சந்தர்ப்பமானது குறைவாகவே உள்ளது. என இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

Siwan Anderson (2007) என்பவர் எழுதிய “ The Economic of Dowry and Bride Price’’ எனும் ஆய்வறிக்கையில் திருமணப் பரிசு, மஹர் பற்றி கூறப்பட்டுள்ளது. இங்கு மஹரானது பணமாக, பொருளாக இருக்கலாம். இது திருமணத்தின் போது மனைவிக்கு கொடுக்கப்படுகிறது. இதன் போது திருமணம் செய்து கொள்ளும் நேரம், பணம் செலுத்துவதற்கான திகதி என்பன இங்கு குறிப்பிடப்படுகிறது. கணவன் மனைவியை விவாகரத்துச் செய்த பின் மனைவி அவளுடைய மஹரைத் திருப்பிச் செலுத்துவதில்லை. அத்துடன் ஒத்தி வைக்கப்பட்ட மஹரும் வழங்கப்படுகிறது. என கண்டறியப்பட்டுள்ளன.

S.J.D. (2007) என்பவர் எழுதிய ‘‘Flirting With God in Western Secular Courts: Mahr in the West’’எனும் ஆய்வுக் கட்டுரையில் மஹர் பற்றி ஆராயப்படுகிறது. கனடா, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இஸ்லாமிய திருமணத்தில் ஒன்றான மஹர் பின்பற்றப்படுகிறது. மேற்கத்திய நீதிமன்றங்களில் முஸ்லிம் பெண்களுக்கு சட்டரீதியாக விருப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அத்துடன் மேற்கத்திய சட்டங்களில் மஹர் உறவை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக, ஒரு கருவியாகக் கொள்ளப்படுகிறது. மேலும் திருமண ஒப்பந்தங்களில் மஹரானது பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளது. இப்பிரதேசங்களில் மஹரானது இரண்டு முறைகளில் பின்பற்றப்படுகிறது. திருமண நேரத்தில் வழங்கப்படும் மஹர் உடனடியான மஹர் என்றும், விவாகரத்தின் பின் வழங்கப்படும் மஹர் ஒத்தி வைக்கப்பட்ட மஹர் என்றும் கூறப்படுகிறது. மேற்கு மாநிலத்தில் பின்பற்றப்படும் மஹரானது இஸ்லாமிய சட்டத்தின் குடையின் கீழும், மேற்கத்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழும், மேற்கத்திய குடும்பச் சட்டத்தின் கீழும் அமைந்துள்ளது. அத்துடன் இங்கு மஹரானது மத அடையாளத்தை வெளிப்படுத்துவதாகவும், மதவழிபாட்டு முறையாகவும் கொள்ளப்படுகிறது. மேலும் இங்கு மஹரானது இஸ்லாமிய பழக்க வழக்கமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் ஒப்பந்தமாகவும் அங்கீகரிக்கப்படுகிறது. என கண்டறியப்பட்டுள்ளது.

அனஸ் (2009) என்பவர் எழுதிய ‘‘புத்தளம் முஸ்லிம்களின் வரலாறும் வாழ்வியலும்’’ எனும் நூலில் புத்தளம் மக்களின் திருமண உறவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதில் திருமணப் பேச்சு வார்த்தையில் சீதனம், மஹர் முதலிய பொருளாதாரக் கொடுப்பனவுகள் பற்றிய தீர்மானங்கள் இடம் பெறுகின்றன. இதில் மணமகனுக்கு சீதனம் தொடர்பான சம்பிரதாயங்கள் இடம் பெறும் அதேவேளை மணமகனால் மணமகளுக்கு மஹர் தொகை திருமணத்தின் போது வழங்கப்படுவதாக அறிய முடிகிறது.

Nathan B. Oman (2010) என்பவர் எழுதிய ‘‘Barganing in the Shadow of God’s Law: Islamic Mahr contracts and the Perils of Legel Specialization’’ எனும் ஆய்வறிக்கையில் மஹர் என்பது இஸ்லாமிய சட்டத்தில் முக்கியமானதொன்று எனவும் அமேரிக்கா நீதிமன்றத்தில் முஸ்லிம் திருமணத்தில் மஹர் தொடர்பான பேச்சுவார்த்தை ஜோடியிடமோ அல்லது குடும்பங்களிடமோ இடம் பெற வேண்டும். அத்துடன் நீதிமன்றங்களில் இது மனைவியின் உரிமையாகவும் கொள்ளப்படுகிறது. மேலும் ஒத்திவைக்கப்பட்ட மஹர் நடைமுறையும் காணப்படுகிறது. அதாவது கணவன் திருமணத்தின் போது மனைவிக்கு வழங்குவதாக வாக்குறுதியளித்த மஹர் தொகை விவாகரத்தின் போது வழங்கப்படுகிறது. மேலும் திருமண சொத்துக்களை வழங்குவதற்கான மஹர் ஏற்பாடு அமேரிக்கா விவாகரத்து சட்டங்களில் உள்ளது. கணவன் தன் மனைவியைத் தவிர்க்க விரும்பினால் மனைவி ஒத்திவைக்கப்பட்ட மஹரின் மதிப்பிற்கு மட்டுபடுத்தப்பட்ட திருமண சொத்துக்களுக்கு உரிமை கோரலாம். இதன் மூலம் மனைவிக்கு பொருளாதாரப் பாதுகாப்பு உரிமை பேணப்படும். கணவன், மனைவி இருவரும் மஹர் தொடர்பில் சமரசப் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் விளக்கப்பட்டுள்ளது.

Landinfo (2011) ‘‘Afganistan : Marriage’’ எனும் ஆய்வு அறிக்கையில் ஆப்கானிஸ்தான் சட்டத்தில் மஹர் பற்றி கூறப்பட்டுள்ளது. எந்தப் பெண்ணும்

திருமணத்திற்குள் நுழையும் போதும் அவளிடம் மஹர் வழங்கப்படும். இத் தொகை அப்பெண்ணுக்குத் தனியானச் சொத்தாக காணப்படுகிறது. மேலும் கணவன் இறந்தால், விவாகரத்துக் கோரினால் அத்தொகை திருப்பி பெண்களிடமிருந்து பெறப்படமாட்டாது. இச்சந்தர்ப்பத்தில் மஹர் தொகை பெண்களுக்கு தங்கள் வாழ்வைக் கொண்டு நடத்த பாதுகாப்பு அளிக்கும். மேலும் மஹர் என்ற விடயம் இஸ்லாமிய சட்டத்துடன் வாதிக்கப்படுகிறது. அத்துடன் ஆப்கானிஸ்தான சட்டத்தில் திருமண நிகழ்வில் மஹரின் அளவு பற்றி எந்த அறிவுறுத்தல்களும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மஹரின் தொகைப் பற்றி மணமகளிடம் மணமகனால் கேட்கப்படுகிறது. இத்தொகையானது சாதாரண அளவான பணத்தின் அளவைக் கொண்டிருக்கும் அல்லது பொருட்களின் தொகையைக் கொண்டிருக்கும் என அறிய முடிகிறது.

Abdul Haknora (2012) என்பவர் எழுதிய ''Right of Women to Mahr (dower) under Islamic Law and Malaysian Family Law''எனும் ஆய்வுக் கட்டுரையானது மலேசியா நீதிமன்றங்களில் பெண்களின் உரிமையைக் கடைப்பிடிக்கும் சட்ட விதிகளையும் அதன் நடைமுறைகளையும் மையமாகக் கொண்டுள்ளது. மேலும் இக்கட்டுரையில் சரீஆ நீதிமன்றங்களில் காணப்படும் மஹர் அம்சம் மலேசியாவில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது? மஹர் தொடர்பான பிரச்சினைகள் என்ன? என்பன பற்றி கண்டறியப்பட்டுள்ளது.

Noor Mohamed (2013) என்பவர் மேற்கொண்டுள்ள ''Islamic Law & Women Rights in Bangladesh'' எனும் ஆய்வின் மூலம் வங்காளதேச சட்டத்தில் முஸ்லிம் பெண்களின் உரிமைகள் பற்றிக் விளக்கப்பட்டுள்ளமையைப் புரிந்துகொள்ள முடியும். இங்கு வரதட்சனை தடை செய்யப்பட்டுள்ளதுடன் மஹர் வழங்கி திருமணம் செய்யும் முறையும் காணப்படுகிறது என அறிய முடியும்.

Shameela Yoosuf Ali (2013) என்பவர் எழுதிய ''Women and Muslim Marriage Practice in Mawenella: A Gender Perspective'' என்ற ஆய்வில் மாவனல்லை மஹரின் எழுச்சிக்குப்பிறகு இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் ஊடகங்கள் மஹர் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினாலும் நேரடி வரதட்சனை பெறும் முறை அதிகமாகவும் மறைமுகமாக வரதட்சனைப் பெறும் முறை குறைவாகவும் உள்ளதாகக் கண்டறிந்துள்ளார்.

International Organization for Migration (2014) ''Pilot Study Tourist Marriage in Yemen''எனும் அறிக்கையில் யெமனில் வித்தியாசமான திருமண நடைமுறைகள் எமனின் பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. யெமன் திருமணத்தில் மஹர் தொடர்பான செலவுகள் பல்வேறு அம்சங்களில் அதிகரித்துள்ளது. அதாவது வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை போன்றவற்றால் அதிகரித்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

Ursula Gunther, Martin Herzog and Stephanie Mussing (2015) என்பவர் எழுதிய ''Researching Mahr in Germany: A Multidisciplinary Approach'' எனும் ஆய்வறிக்கையில் ஜேர்மன் சட்டத்தில் இஸ்லாமிய திருமணத்தின் அம்சங்களில் ஒன்றான மஹர் பற்றி கூறப்பட்டுள்ளது. ஜேர்மன் சட்டத்தில் மஹர் திருமணத்தின் போது வழங்கப்படுகிறது. ஒரு சொத்து பரிமாற்றத்தின் ஒரு சிறப்பு வடிவமாக மஹர் காணப்படுகிறது. அத்துடன் ஜேர்மனிய சட்டத்தில் ஒரு பெண் ஆணிடம் இருந்து விவாகரத்து பெற்றுக் கொண்டால் அவளுக்கு நிதிப்பாதுகாப்பை ஏற்படுத்த இந்த மஹர் தொகை உதவுகிறது. ஜிவனாம்சம், திருமண சட்டம் வெவ்வேறாக நோக்கப்படுகிறது. வறுமையை ஒழிக்கும் ஒன்றாகவும் மஹர் காணப்படுகிறது. மேலும் இச்சட்டத்தில் மஹர் திருமணச் சொத்து, இழப்பீடு என அழைக்கப்படுகிறது. தம்பதிகள் திருமணம் செய்வதற்கான ஊக்கத் தொகை எனவும் கூறப்படுகிறது. ஐரோப்பாவில் மஹர் இஸ்லாமியக் குடும்பச் சட்டத்தின் பகுதியாகக் காணப்படுகிறது. அத்துடன் ஜேர்மனில் பெண்களுக்கான சமூக மற்றும் பொருளாதார உரிமையாகக் காணப்படுகிறது. இதன் மூலம் பெண்களுக்கு சட்டபூர்வமான பொருளாதார நிதிப்பாதுகாப்பை அளிக்கிறது. விவாகரத்தின் பின் பெண்களுக்கு பாதுகாப்பான சமூக நிலைப்பாட்டை வழங்குகிறது. இது ஒத்திவைக்கப்பட்ட மஹர் எனவும்

அழைக்கப்படுகிறது. தன்னிச்சையான விவாகரத்திற்கு எதிராக ஒரு பெண்ணைப் பாதுகாப்பதற்கான கருவியாகக் கருதப்படுகிறது. அத்துடன் சமூக கௌரவமாகக் கருதப்படுகிறது என இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

Raihana Abdullah,Thaslim Mansoor, Fuadan Johari and Wirdati Mohd Radzi (2015) என்பவர் எழுதிய ''Financial Support for women under Islamic Family Law in Bangladash and Malaysia''ஆய்வானது பெண்களுக்கு வழங்கும் நிதியுதவி பற்றி ஆராய்ந்துள்ளது. இங்கு முஸ்லிம் திருமணத்தில் முக்கியமான அம்சமாக மஹர் நடைமுறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அத்துடன் பங்களாதேசத்தில் ஒத்தி வைக்கப்பட்ட மஹரை பெண்கள் தங்களது சமூகப் பொருளாதாரக் காரணிகளுக்காக இழக்கின்றனர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

Raihana Azahari and Hasbi muh Ali (2015) என்பவர் எழுதிய ''Mahr as a form of economic security: A preliminary study'' எனும் ஆய்வுக் கட்டுரையில் மலேசியாவின் மஹர் நடைமுறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இங்கு மஹரானது முஸ்லிம் பெண்களின் சொத்துரிமையாக கணிக்கப்படுகிறது. அத்துடன் மஹர் நடைமுறையில் இஸ்லாமிய சட்டம் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் வழங்கப்படுகிறது. ஆனால் சமுதாயத்தின் சமூக கலாச்சார கோட்பாட்டின் அடிப்படையில் நடைபெறுவதில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மலேசியாவில் கணவன் இறந்த பெண்ணுக்கும், விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கும் மஹர் மூலம் பொருளாதார பாதுகாப்பு வழங்கப்படுகிறது. எனினும் மலேசியாவில் முஸ்லிம் பெண்களுக்கு வழங்கப்படும் மஹரின் அளவானது பொருளாதார பாதுகாப்பை வழங்க போதுமானதாக இல்லை. அதாவது அது அவர்களது தேவையை நிறைவு செய்யும் செலவை ஈடுசெய்யப் போதுமானதாயில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

Norani Binti Md Hashim (2015) என்பவர் எழுதிய ''Right of A Muslim Women Before and During Marriage and Upon Divorce as Conferred by the Islamic Family Law (Federel territories Act) 1984,Malaysia'' எனும் ஆய்வுக் கட்டுரையில் பெண்களுக்கு உரிமைகள் உண்டு எனவும் மலேசியாவில் இஸ்லாமியக் கட்டுப்பாட்டின் கீழ் குடும்பச் சட்டம் காணப்படுகிறது. இதனூடாக பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. திருமணத்தில் மஹர் பெறும் மஹர் உரிமையை மலேசியாவில் குடும்பச்சட்டங்களில் இயற்றப்பட்டுள்ளதாகவும் இவர் கண்டறிந்துள்ளார்.

ஜெஸீல் மற்றும் ரினோஸா (2015) ஆகியோரால் ''முஸ்லிம்களின் திருமணத்தில் மஹரும், அன்பளிப்பும்: கல்முனைக்குடி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு'' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வு முடிவுகளின் படி, கல்முனை முஸ்லிம்களின் திருமணம் மஹரை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும் மஹரின் தொகை மிகப் பெரும்பாலும் ஐம்பதாயிரத்திற்கு உட்பட்டதாகவும் , மஹர் பணமாக அன்றி தங்கமாக செலுத்தப்படுகிறது. மஹர் தொகையை நிர்ணயிக்கும் உரிமை மணப்பெண்ணுக்கு இல்லாதிருப்பதுடன் மணமகன் பெண் வீட்டாரிடம் நன்கொடைப் பெற்று மஹர் வழங்கும் பழக்கமும் காணப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

Fazal Muzhary (2016) என்பவர் எழுதிய ''The Bride Price: The Afghan tradition of Playing For Wives'' எனும் ஆய்வுக்கட்டுரையில் ஆப்கானிஸ்தானில் முஸ்லிம் திருமணங்கள் ஆடம்பரமாக நடை பெறுகிறது. இத்திருமணங்களில் அதிகமான பணம் ஆடம்பரத்திற்காக செலவிடப்படுகிறது. இத்திருமணங்களில் ஆடம்பரமான உணவுகள் மற்றும் அரங்குகள், சீதனம், மஹர் போன்ற நடைமுறைகள் காணப்படுகின்றன. இதில் மஹர் பெறுவது பெண்ணின் உரிமையாகக் கொள்ளப்படுகிறது. மஹர் தொகையானது மணமகனால் மணமகளுக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் கணவன் இறந்துவிட்டால் அல்லது விவாகரத்து செய்து விட்டாலும் அத்தொகை அவளிடம் இருக்கும் என கண்டறியப்பட்டுள்ளது.

Shyamal Chowdhury,Debdulal Mallick,Prabal Roy Chowdhury (2017) போன்றோர் எழுதிய''Natural Shocks and Marriage Markets: Evolution of Mehr and Dowry in Muslim Marriages' எனும் ஆய்வுக் கட்டுரையில் மஹர் பற்றி

ஆராயப்பட்டுள்ளது. பங்களா தேசத்திலும் இந்திய துணைக்கண்டத்திலும் மற்றைய நாடுகளிலும் திருமணத்தின் போது வழங்குவதாக வாக்களிக்கப்பட்ட மஹர் தொகையை திருமணத்தின் பின் விவாகரத்து நடந்தாலும் அத்தொகை மனைவியிடம் செலுத்தப்படுகிறது இதன் போது பெறப்பட்ட சீதனமும் திருப்பி செலுத்தப்படுகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

ஓர் ஆய்வாளன் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட மூலங்களை ஆராய்ந்து அறிவது அவசியமாகும். ஏனெனில் குறித்த ஆய்வின் நோக்கங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கும், ஒப்பிட்டு நோக்குவதற்கும் அது துணைசெய்யும். ஓர் ஆய்வில் இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்ற போது மட்டுமே அது பூரணத்துவம் பெற்ற ஆய்வாக அது அடையாளப்படுத்தப்படும். எனவே இலங்கை முஸ்லிம்களின் திருமணத்தில் மணக்கொடை என்ற தலைப்பிலும் மற்றும் அதனுடன் தொடர்பான தலைப்புகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது அறிந்துகொள்ளத்தக்கதாக உள்ளது. ஆயினும் அநுராதபுர மாவட்வ முஸ்லிம்களை மையப்படுத்தியதான ஆய்வுகள் மேற்படி தலைப்பில் மேற்கொள்ளப்படாமை அல்லது நூல்கள் வெளிவராமை பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையில் அவ்விடைவெளியைப் பூர்த்தி செய்யும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## 4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவை நகரம் மற்றும் பஹலகம கிராமத்தில் வாழும் முஸ்லிம்கள் குடித்தொகையாகக் கொள்ளப்பட்டு அப்பகுதிகளில் ஆய்வுக்கான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இது ஓர் அளவுரீதியான ஆய்வாகும். இதில் முதன்மைத் தரவுகள் வினாக்கொத்து மூலம் பெறப்பட்டுள்ளன. கெகிராவை நகரம் மற்றும் பஹலகம கிராமத்தில் திருமணமான 05 வருடத்திற்குற்பட்ட ஆண்கள், பெண்களிடம் தரவுகள் திரட்டப்பட்டன. இதில் கெகிராவை நகரத்தில் வாழ்ந்து வரும் 500 பேரில் 20% (100 Respondents), பஹலகம கிராமத்தில் 150 பேரில் 20% (30 Respondents) மொத்தமாக 130 பேர் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்துகள் விநியோகம் செய்யப்பட்டன. மேற்படி வினாக்கொத்துகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் SPSS மென்பொருள் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இதனூடாக ஆய்வின் பிரதான நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன. ஆய்வில் கோட்பாட்டு ரீதியான வரையறைகளை அடையாளப்படுத்துவதற்கு இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் படி, பிரதேச செயலாளர் பிரிவு அறிக்கை, புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத் தள தகவல்கல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4.1 பங்கேற்றோர் தொகை விபரங்கள்

தகவல் தருனர் விபரம் பற்றிய வினாக்கள் கிராம சேவகர் பிரிவு, பால், கல்வித்தகைமை, வயது, தொழில் ஆகிய அம்சங்களைப் பற்றியனவாகும். 628வது கிராம சேவகர் பிரிவினுள் உள்ளடங்குகின்ற கெகிராவைப் பிரதேசம் பல உபபிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவ்வுபபிரிவுகளில் கெகிராவை நகரமும் 643 கிராம சேவகர் பிரிவில் உள்ளடங்கும் பஹலகம ஆகியவற்றை மட்டும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஆயினும் அவர்களின் வீதம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவ்விரண்டு உபபிரிவுகளிலும் காணப்படும் முஸ்லிம்களில் ஐந்து வருடத்திற்குற்பட்ட திருமணமாகிய சனத்தொகை வீதத்திற்கேற்ப தகவல் தருனர்களின் வீதம் அமையப் பெற்றிருப்பது அதற்கு காரணமுமாகும். உதாரணமாக ஐந்து வருடத்திற்குற்பட்ட திருமணமாகிய முஸ்லிம்களின் எண்ணிக்கை கெகிராவை நகரத்தில் ஆண்கள் 500 பேரும் பஹலகம கிராமத்தில் 150 ஆகும். அந்த வகையில் தகவல் தருனர்களின் விகிதாசாரமும் எண்ணிக்கைக் கேற்ப மாறுபடுவதைக் காணலாம். கெகிராவையில் தகவல் தருனர் 76.92% ஆக காணப்படுகையில் பஹலகமயில் 23.07% ஆகக் காணப்படுகிறது. எனவே ஒவ்வொரு எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு 5:1 என்ற விகிதத்தில் வினாக்கொத்து விநியோகிக்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இங்கு 130 தகவல் தருனர்கள் 100% ஆகக் கணிக்கப்படுவர்.

தகவல் தருனர்களில் பால் ரீதியான பிரதிநிதித்துவம் ஆண்கள் 50% பெண்கள் 50% எனக் காணப்படுகிறது. இப்பகுதியில் பெண்களின் தொகை அதிகமாக்

காணப்படினும் கடந்த ஐந்து வருடங்களில் திருமணம் செய்தவர்கள் ஒன்றில் ஆண் அல்லது பெண் என்ற வகையில் அவர்களுக்கு சம பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. கெகிராவை நகரம் மற்றும் பகலகம கிராமத்தில் மொத்த சனத்தொகையில் சரி சமனாக தகவல்கள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகவல் தருனர்களின் வயது தொடர்காக நோக்குகையில் பெரும்பான்மையானோர் 21-30 வயதிற்கு இடைபட்டோராவர். இவர்கள் 50% காணப்படுகின்றனர். அதிலும் 31-40 வயதிற்கு இடைபட்டோர் 30% ஆகக் காணப்படுகின்றனர். மேலும் 20 வயதிற்குள் 12.3% காணப்படுகின்றனர். 41 வயதிற்கு மேற்பட்டவர்களின் பிரதிநிதித்துவம் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகிறது

கல்வித்தகைமை தொடர்பாக நோக்குகையில் தகவல் தருனர்களில் அதிகமானோர் (52.3%) இரண்டாம் நிலைக் கல்வி பயின்றோர் ஆவர். முறைசார் கல்வியை பெறாதவர்கள் (7.69%) ஏனையோரிலும் பார்க்க குறைவாக உள்ளனர். இதற்கான காரணம் இப்பகுதியில் கல்விக்கு அதிக ஊக்கம் கொடுக்கப்படுவதாகும். பல்கலைக்கழகக் கல்வி பெற்றோர் சுமார் 20%, ஆரம்பக் கல்வி கற்றோர் 10% இவ்வாய்வில் தகவல் தருனர்களாக பங்கேற்றுள்ளனர்.

பதிலுரைப்போரின் தொழிற் துறை தொடர்பாக நோக்குகையில், விவசாயத்தில் ஈடுபடுவோர் 12.30% காணப்படுகின்றனர். அடுத்து தொழிலற்றோர் வீதம் 27.69% அதிகமாக உள்ளது. முஸ்லிம் பெண்கள் பெரும்பாலும் தொழிலில் ஈடுபாடுகாட்டாதவர்களாக இருப்பதால் அவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர். வியாபாரத்தில் ஈடுபடுவோர் பங்கேற்கின்றனர். இவர்கள் 19.23% உள்ளனர். கெகிராவைப் பிரதேச மக்களின் கல்வித்தகைமை அடிப்படையில் அரச உத்தியோகத்தர் 13.84% காணப்படுகின்றனர். அதே போன்று சுயதொழிலில் ஈடுபடுவோர் 10.76% வீதமானோரும் மீன் பிடித்தலில் 16.15% வீதமானோரும் காணப்படுகின்றமையை இவ்வட்டவணை மூலம் காணக் கூடியதாக உள்ளது.

### 4.2 நிகாஹ் தொடர்பான விபரம்

நிகாஹ் என்பது இஸ்லாமிய திருமண ஒப்பந்தம் என்று பொருள்படும். திருமணம் என்பது எல்லா மக்களாலும், எல்லா மதத்தினராலும் மகிழ்ச்சிகரமாக நடாத்தப்படும் வாழ்வியல் ரீதியான நிகழ்ச்சியாகும். இவ்வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் நடைபெறும் நிகாஹ் தொடர்ான விடயங்கள் பற்றி இப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளது. எனவே பின்வரும் தலைப்புகளினூடாக நிகாஹ் தொடர்பான விபரங்கள் பற்றிக் கலந்துரையாடப்படுகிறது.

#### 4.2.1 நிகாஹ் நிகழ்ந்த இடம்

ஆய்வுப் பிரதேசத்தில் மஸ்ஜித், மணமகன் வீடு, மண்டபம், மணமகள் வீடு போன்ற இடங்களில் நிகாஹ் வைபவங்கள் நிகழ்ந்துள்ளன. தகவல் தருனர்களின் திருமண வைபவங்கள் நிகழ்ந்த இடங்களை நோக்கும் போது அதிகமான திருமணங்கள் (44.61%) மணமகள் வீட்டில் இடம்பெற்றுள்ளன. மேலும் மண்டபத்தில் 33.07% திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. இடவசதியின்மை காரணமாகவும், திருமணத்தை சிறப்பாக மேற்கொள்ளவும் திருமண வைபவம் மண்டபத்தில் நடத்தப்பட்டிருக்கிறது. மணமகன் வீட்டில் 15.38%, மற்றும் பள்ளிவாயல்களில் 6.29% திருமணங்கள் இடம்பெற்றிருக்கிறன.

#### 4.2.2 நிகாஹ் இடம்பெற்ற நேரம்

முஸ்லிம்களது திருமணத்தில் நிகாஹ் இன்றியமையாத அம்சம் என்ற வகையில் கெகிராவை முஸ்லிம்களது திருமணத்திலும் ‘நிகாஹ்’ இடம்பெற்றிருக்கிறது. நிகாஹ்

என்பது காவின் எழுதுதல் என்று சொல்லப்படுகின்றது. அதாவது காவின் என்றால் திருமண ஒப்பந்தத்தை பதிவு செய்யும் நிகழ்வு ஆகும். இந்நிகழ்வு கெகிராவை முஸ்லிம்களது நிகாஹ் பெரும்பாலும் (63%) மாலை நேரங்களில் இடம் பெற்று வருகிறது. எனினும் காலை நேரங்களில் 32% காவின் ஒப்பந்தங்கள் எழுதப்படுகின்றன. இரவு வேளைகளில் இடம்பெறும் காவின் ஒப்பந்தங்கள் (5%) மிகக் குறைவாகும்.

#### 4.2.3 நிகாஹில் (வலி) பொறுப்பாக இருந்தோர் விபரம்

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை வலியாக இருந்தவர்களது விபரத்தை நோக்கும் போது பெரும்பாலான திருமணங்களில் (76.3%) மணப்பெண்ணின் தந்தை பொறுப்புதாராக இருந்திருக்கிறார். சுமார் 9.18% திருமணங்களில் மணப்பெண்ணின் சகோதரர், 8.96% தந்தையின் சகோதரரனும், 2.15% மாக காழியும் வலிகாரர்களாக அமர்ந்துள்ளனர்.

#### 4.2.4 நிகாஹில் இடம் பெற்ற நிகழ்வுகள்

இவற்றைத் தொடர்ந்து நிகாஹின் முக்கிய கட்டங்கள் இடம் பெறுகின்றன. திருமணப் பதிவு, திருமணப் பேறுரை (குத்பா), சாட்சிகள், ஈஜாப், கபூல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. மணமகளின் பொருப்பாளருக்கும் மணமகனுக்கும் இடையில் ஈஜாப், கபூல் 100% இடம் பெற்று வருகிறது. மணமுடித்த விடயத்தை வலிகாரர் அல்லது வக்கீல் மணமகனிடம் கூறுவதை ‘ஈஜாப்’ என்றும் மணவாளன் அதை ஏற்றுக் கொள்வதை ‘கபூல்’ என்றும் சொல்லப்படும். இந்நிகாஹை இஸ்லாமிய மார்க்க அறிவுள்ள ஓர் ஆலிம் அல்லது அவருக்கு சமனான வேறு ஒருவர் நடாத்தி வைப்பார். இவற்றுடன் இரு சாட்சிகளும் கையெப்பமிடுவர். இந்நடைமுறையை 92.70% தகவல் தருனர்களின் திருமண வைபவங்களில் இடம்பெற்றுள்ளன.

கெகிராவை மற்றும் பஹலகம பிரதேசங்களில் இடம் பெற்ற நிகாஹில் ஈஜாப் கபூல், சாட்சிகள் என்பன 100% இடம்பெற்று வருகின்றது. நிகாஹ் பதிவு 100% இடம்பெறுகின்றது. இந்நிகழ்வுடன் காவின் முடிந்து விடுகின்றது. இது ‘காவின் முடித்தல்’ அல்லது ‘நிகாஹ் முடித்தல்’ எனப்படுகிறது. இதன் போது மணமகள் பிரசன்னமாவதில்லை. இதைத் தொடர்ந்து சுமார் 20 நிமிடங்கள் வரை குத்பா உரை ஒன்றும் இடம் பெறும். ஆய்வுப் பிரதேசத்தில் இடம் பெற்ற நிகாஹில் குத்பா 95% இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. குத்பாவுடன் அனைவரும் ஸலாம் கூறி விடைபெறுவர்.

## 5. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

கெகிராவை மற்றும் பஹலகம பிரதேசங்களில் வினாக்கொத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் மஹர் நடைமுறைகள், குறித்த பிரதேசத்தில் மஹர் பெறும் முக்கியத்துவம் ஆகிய நோக்கங்கள் பின்வரும் உப தலைப்புகளினூடாகக் கலந்துரையாடப்படுகின்றன.

### 5.1 மஹர் முக்கியத்துவம்

மஹர் என்பது மணக்கொடை என்று அழைக்கப்படுகிறது. மஹர் முஸ்லிம் திருமணத்தில் தவிர்க்க முடியாத அம்சமாகும். திருமண சட்டத்தில் முக்கியமான ஒரு நிபந்தனையாகக் காணப்படுகிறது. இந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் எந்தளவு முக்கியத்துவம் பெறுகிறது என்ற நோக்கத்தை அடைந்துக் கொள்ள முயற்சிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் தலைப்புகளில் அராயப்பட்டது.

#### 5.1.1 மஹர் பற்றிய கருத்துநிலை

ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் திருமணத்தில் மஹர் பற்றிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. மஹர் பற்றிய எண்ணக்கருவை அடைந்துக் கொள்ள மஹர் பற்றி

என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்கப்பட்டு அதற்கான தெரிவுகளாக 'முக்கியமானது, ஓரளவு முக்கியமானது, முக்கியமில்லை' ஆகிய மூன்று வழங்கப்பட்டன.

இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் இஸ்லாமிய திருமண நடைமுறைகள் பற்றி அறிந்துள்ளனர். இதன் விளைவாக மஹர் என்பது முக்கியமான அம்சமாகக் கருதுகின்றனர். இங்கு 130 வினாக் கொத்து பத்திரங்கள் வழங்கப்பட்ட போது மஹர் முக்கியமானது என்பதை 83 பேர் குறிப்பிட்டுள்ளனர். இதை சதவீதத்தில் குறிப்பிட்டால் 63.84% எனக் கொள்ளலாம். மஹர் பற்றி பூரண அறிவில்லாதோரும் இங்கு வசிப்பதால் அவர்களின் பார்வையில் மஹர் ஓரளவு முக்கியமானதாகக் காணப்படுகிறது. இதன் விளைவாக மஹர் என்ற அம்சம் ஓரளவு முக்கியமானது என 31 பேர் வாக்களித்துள்ளனர். இதனை 23.84% என காட்டலாம். ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் திருமணங்களில் அந்நிய கலாசாரத் தாக்கம், பூரண இஸ்லாமிய அறிவின்மை, பொது அறிவின்மை, பழமைவாதம் போன்றன செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இதனால் மஹர் முக்கியமானதல்ல எனும் கருத்து இவர்களிடையே காணப்படுகிறது. இலங்கை முஸ்லிம் திருமணத்தில் மணக்கொடை பற்றிய எண்ணக்கருவை கெகிராவை, பஹலகம பிரதேசங்களில் ஆய்வுக்குற்படுத்திய போது மணக்கொடை முக்கியமானதல்ல என 16 (12.30%) பேர் விடையளித்துள்ளனர். எனவே பதிலுரைப்போர் அதிகமானோரின் கருத்தின்படி ஆய்வுப் பிரதேச முஸ்லிம்களிடத்தில் குறப்பிடத்தக்களவு மஹர் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது எனும் வரமுடியுமாக உள்ளது.

### 5.1.2 வழங்கப்பட்ட மஹரின் பெறுமதி

இலங்கையில் அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவை நகரம் மற்றும் பஹலகம கிராமத்தில் மஹர் எந்தளவு முக்கியத்துவம் பெறுகிறது என்ற நோக்கத்தை அடைந்துக் கொள்ள வினாக்கொத்தில் மஹரின் பெறுமதி பற்றி வினவப்பட்ட போது ஒவ்வொரு சாராரும் தமக்கு வழங்கப்பட்ட அல்லது தான் வழங்கிய மஹரின் பெறுமதியைக் கருத்திற் கொண்டு விடையளித்தனர். அவ்வகையில் மிகக் குறைந்த தொகையாக ரூ. 101-1000 இற்குட்பட்ட வகையில் செலுத்தப்படுகிறது. ரூ. 101-1000 இடைப்பட்ட தொகையில் மணக்கொடையை 04 (3.07%) நபர்களால் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களில் வாழும் குறிப்பிடத்தக்க முஸ்லிம்களிடத்தில் பழமைவாதம், வறுமை, அறியாமை போன்ற அம்சங்கள் புரையோடிப் போயுள்ளமை இதற்கான காரணமாக இருக்க முடியும். ஆய்வுப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாகவும், கூலித் தொழில் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் சிலர் மஹர் தொகையைக் குறைந்தளவில் கொடுத்து வருகின்றனர். ரூ.1001-5000 இடைப்பட்ட தொகையில் மணக்கொடையை 08 (6.15%) நபர்கள் வழங்கியுள்ளனர். இங்கு வாழும் முஸ்லிம்களில் அதிகமானோர் இத்தொகை தமது சக்திக்கு உட்பதும் தமக்குப் பொருத்தமானதுமாகும் எனக் கருதுகின்றனர். 130 வினாக்கொத்துகள் விநியோகிக்கப்பட்ட போது 74 (56.92%) பங்குபற்றுனர்கள் இத்தொகையில் மணக்கொடையை வழங்கியிருப்பதை அறிய முடிந்தது.

இப்பிரதேசங்களில் அதிகமான முஸ்லிம்கள் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தோராவர். திருமணத்தை தமது வசதிற்கேற்ப செய்து கொள்கின்றனர். ரூ.10,001-50,000 இற்கு உட்பட்ட தொகையில் மணக்கொடையை 22 (16.92%) நபர்கள் வழங்கியுள்ளனர். கெகிராவை மற்றும் பஹலகம பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களில் சிலர் வசதி படைத்தோராக உள்ளனர் என்பதனாலும் மஹர் பற்றிய போதிய அறிவு இருக்கிறது என்பதனாலும், தமது செல்வாக்கை நிலை நிறுத்தவும் ரூ.50,000-100,000 இடைப்பட்ட தொகையில் மஹரை செலுத்துகின்றனர். இத் தொகையில் 10 (7.69%) நபர்கள் மணக்கொடையை வழங்கியுள்ளனர். இப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் சிலரிடையே பணத்தை மஹராக செலுத்தும் வழக்கம் காணப்படுகிறது. ரூ.100,000 இற்குமேல் 22 (9.23%) நபர்கள் கொடுக்கின்றனர். எனவே ஆய்வுப் பிரதேசத்தில் ரூ.5001-10,000 தொகைக்குள் மஹரை அதிகமான நபர்கள் செலுத்துவதால் மஹரானது 5001-10,000 குள் இருக்கிறது எனும் முடிவுக்கு வர முடியும்.

### 5.1.3 மஹர் பெறும் உரிமை (பால் ரீதியாக)

குடும்பத்தில் ஐந்து வருடத்திற்குள் திருமணமாகிய தம்பதியினரிடையே மஹரானது யாரின் உரிமை என வினவப்பட்ட போது சிலர் பெண்களின் உரிமை என்றும் மற்றும் சிலர் ஆண்களின் உரிமை என்றும் விடையளித்தனர். இஸ்லாத்தைப் பொறுத்தவரை மஹர் கேட்பது பெண்களின் உரிமை என குறிப்பிடப்படுகிறது. ஒரு பெண மஹர் தொகையை எந்தளவு வேண்டுமானாலும் கேட்க முடியும். இது அவளது உரிமையாக உள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் அதிகமானோர் ஆண்களின் உரிமை அல்லது ஆண்களின் விருப்பப்படியானது எனக் கூறினர். இவ்வகையில் 78 (60%) நபர்கள் ஆண்களின் உரிமை எனக்குறிப்பிட்டனர். ஆய்வுப் பிரதேசத்தில் ஆணாதிக்கம், திருமணச் சட்டங்கள் பற்றிய தெளிவின்மை, கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படல் போன்ற காரணங்கள் செல்வாக்குச் செலுத்துவதனால் மஹர் ஆண்களின் உரிமையெனும் கருத்து பிரதேச மக்களிடையே நிலவுகிறது எனக் கொள்ள முடியும். வினாக்கொத்தில் மஹர் என்பது பெண்களின் உரிமை என 52 (40%) பேர் குறிப்பிட்டுள்ளனர். எனவே ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் ஆண்களின் உரிமை என்ற கருத்து பெரும்பாலானோரிடம் நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

### 5.1.4 மஹராக வழங்கப்பட்ட பொருள்

ஆய்வுப் பிதேசத்தில் மஹரானது பெண்வீட்டின் அன்பளிப்பு, பெண் வீட்டின் கைக்கூலி, மணமகனின் சொத்து என்பவற்றின் மூலம் பெறப்படுகிறது. அந்தவகையில் பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்கு பல பொருட்களைப் பரிசளிக்கும் வழக்கமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இச்சொத்தைக் கொண்டு சில ஆண்கள் மஹர் செலுத்தி வருகின்றனர். பெண் வீட்டின் அன்பளிப்பிலிருந்து 7.81% ஆண்கள் மஹரைச் செலுத்துகின்றனர். சில திருமணங்களில் சீதனம் இடம்பெற்று வருவதனால் பெறப்பட்ட பெண் வீட்டு சீதனத் தொகையிலிருந்து (1.23%) மஹர் கொடுக்கும் வழக்கமும் இடம்பெற்று வருகிறது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் அதிகமாக மணமகனின் சொத்திலிருந்து மஹர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைக் அவதானிக்க முடிகிறது.

### 5.1.5 எந்தளவு மஹர் தொகை

ஆய்வுப்பிரதேசத்தில் மஹரின் அளவு பற்றி தெளிவு பெறாதோர் அதிகமாகக் காணப்படுகின்றனர். இது தொடர்பாக வினவிய போது சுமார் 86 நபர்கள் ரூ. 10,000 இற்கு உட்பட்ட வகையில் இடம்பெறுவதாக விடையளித்தனர். 44 நபர்கள் இது தொடர்பாக விடையளிக்கவில்லை. இந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் ரூ. 10,000 இற்கு உட்பட்ட வகையில் வழங்கப்பட்டு வருகிறது என்பது தெளிவாகின்றது.

### 5.1.6 மஹர் தொகை கைவசமிருக்கும் நபர்

ஆய்வுப் பிரதேசத்தில் திருமணமுடிக்கும் தம்பதிகளுக்கிடையில் மஹர் பரிமாறப்படுகிறது. இதன்போது அதிகமாக மனைவியிடம் மஹர் தொகை பாதுகாக்கப்படுகிறது. 113 (86.92%) திருமணங்களில் இந்நிலை அவதானிக்கப்படுகிறது. சுமார் 17 (13.07) திருமணங்களில் மஹர் கணவனிடம் பாதுகாக்கபடுகிறது. எனவே இப்பெறுபேற்றினூடாக ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் தொகை மனைவியிடம் தங்கிவிடுவதை அறிய முடிகிறது.


## 5.2 மஹர் நடைமுறை

ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் திருமணத்தில் மஹர் நடைமுறை பற்றிய தகவல்கள் கீழுள்ள உப தலைப்புகளினூடாக விபரிக்கப்படுகிறது.

### 5.2.1 குடும்பத்தில் மஹர் பின்பற்றப்டும் ஒழுங்கு

ஆய்வுப்பிரதேசத்தில் குடும்பத்தில் மஹர் எவ்வாறு பின்பற்றப்படுகிறது என வினவப்பட்ட போது பங்குபற்றுனர்கள் பின்வருமாறு விடையளித்தனர்.

**வரைபடம்: 4:15 குடும்பத்தில் மஹர் பற்றிய விபரம்**




**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

- ஆ.ம.தொ.தொ.கா: ஆண்கள் மஹர் தொகை தொடர்பாகக் கரிசனை காட்டுவதில்லை
- பெ.ம.கே: பெண்கள் மஹர் கேட்பதில்லை
- ஆ.ம.வ: ஆண்களால் மஹர் வழங்கப்படுகிறது
- பெ.ம.கே.பெ.உ.இ: பெண்களிடம் மஹர் கேட்டுப் பெறும் உரிமை இல்லாதிருத்தல்)

இஸ்லாமிய சட்டம் பற்றி தெளிவின்மை, பழமைவாதம், அன்னியக் கலாசாரத் தாக்கம் போன்ற காரணங்களால் ஆண்கள் மஹரின் முக்கியத்துவம் பற்றிக் கருத்திற் கொள்வதில்லை. சுமார் 15 (11.53%) திருமணங்களில் இந்நிலை இடம்பெறுகிறது. மஹர் விடயத்தில் ஆண்களின் கவனயீனம் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பது கருத்திற்கொள்ளத்தக்கது. இவ்வாறே, கெகிராவை நகரம் மற்றும் பஹலகம பிரதேசங்களில் நடைபெறும் திருமணத்தில் சுமார் 40 (30.76%) பெண்கள் மஹரை வேண்டிக்கொள்வதில்லை. மஹர் பெறுவது பெண்களின் உரிமை என தெரிந்திருந்த போதிலும் ஆண்களின் நலனைக் கருத்திற் கொண்டு மஹர் கோரப்படுவதில்லை. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் ஆணாதிக்கம், பெண்களுக்குக் கருத்துச் சுதந்திரமின்மை, பெண்கள் மஹர் விடயத்தில் கரிசனைக் கொள்ளாதிருத்தல் போன்ற காரணங்களால் 15.38% பெண்களுக்கு மஹர் கோரும் உரிமை இல்லாமல் போகின்றது. இப்பிரதேச முஸ்லிம்களிடையே நடைபெறும் திருமணங்களில் ஆண்களால் மஹர் வழங்கப்படுவது முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. எனவே பெரும்பாலான திருமணங்களில் (42.30%) மஹர் வழங்கப்படுகிறது. அடுத்து பெண்கள் மூலம் மஹர் கோரப்படுகிறதா என்பதற்கு யாரும் விடையளிக்கவில்லை. மஹர் பற்றிய தெளிவின்மை இதற்குக் காரணமாக அமையலாம்.

முடிவாக, ஆய்வுப் பிரதேசத்தில் பெண்கள் தமக்கு வேண்டிய மஹர் தொகையை கோரிக்கை விடுப்பதில்லை. ஏனெனில் தம் மூதாதையர்களின் சிந்தனையைப் பின்பற்றி ஒழுகும் பக்குவமும் பழக்கமும் குறித்த பிரதேச பெண்களிடம் காணப்படுகின்றமையாகும். இவர்கள் இன்னும் மஹர் பற்றி விழிப்படையவில்லை என்றும் குறிப்பிட முடியும். பெண்களிடம் மஹர் கேட்டுப் பெறும் உரிமை தொடர்பான அறிவு இல்லாதிருத்தல் மற்றும் விழிப்புணர்வு அற்றிருத்தல் போன்ற மஹர் தொடர்பான நிலைமைகள் காணப்படுவதை முடிவுகளினூடாக அறிய முடிகிறது.

### 5.2.2 திருமணத்தில் இடம் பெற்ற மஹர், கைக்கூலி, நன்கொடை

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை திருமண வைபவங்களில் சில நிகழ்வுகள் இடம்பெற்று வருகிறது. அவற்றில் மஹர், கைக்கூலி, மணமகளின் பெற்றோரிடமிருந்து நன்கொடை வழங்கப்படல் போன்றன இடம் பெறுகின்றன. இவை பற்றிய தகவல்கள் பின்வருமாறு ஆராயப்படுகிறன.

**அட்டவணை 01: திருமணத்தில் இடம் பெற்ற மஹர், கைக்கூலி, நன்கொடை**

| திருமணத்தில் இடம் பெற்ற நிகழ்வுகள் | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| மஹர் | 78 | 60% |
| கைக்கூலி | 20 | 15.38% |
| பெ. நன்கொடை | 32 | 24.61% |

**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்த வரை பெரும்பாலானோரால் மஹர் வழங்கப்பட்டு வருகிறது. மணமகன் மணமகளிடம் தன்னால் இயன்ற தொகையை மஹராகச் செலுத்தியதன் பின் நிகாஹ் நடைபெறுகிறது. ஓர் அவதானிப்பின் படி, மேற்படி கிராமங்களில் திருமணங்களில் கைக்கூலி இடம் பெறுவது அவமானமாகப் பார்க்கப்படுகிறது. எனினும் ஒரு சிலர் (14.61%) இதற்கு விதிவிலக்கல்ல. மணமகளின் பெற்றோர் மணமகனுக்கு தங்கம், வீடு, நிலம் போன்றவற்றைக் கைக்கூலியாக வழங்குகின்றனர். இறையச்சமின்மை, மஹர் பற்றிய தெளிவின்மை, சொத்துக்கள் மீதான ஆசை சிலரை கைக்கூலி வாஙகச் செய்துள்ளது என்பது தெளிவு. அததோடு ஆய்வுப் பிரதேசத்தில் இடம் பெறும் திருமணங்களின் போது பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நன்கொடைகளையும் வழங்கி வருகின்றனர். அதாவது தங்கம், நிலம், வீடு போன்றவை இவற்றில் உள்ளடங்குகின்றன. தமது பிள்ளைகள் மணமகனின் வீட்டில் மரியாதையுடனும் மனமகிழ்ச்சியுடனும் சீரும் சிறப்புமாக வாழ குறித்த சில பெற்றோர்கள் (40.76%) மணமகனுக்கு நன்கொடைகளை வழங்கி வரும் பழக்கமும் காணப்படுகிறது.

### 5.2.3 அளிக்கப்பட்ட மஹர், கைக்கூலி, நன்கொடை போன்றவற்றின் தன்மை

ஆய்வுப் பிரதேசத்தில் மஹர், கைக்கூலி, நன்கொடை போன்றன தங்கம், வீடு, நிலம், வாகனம், பணம் என பல்வேறு விலைப்பொருட்கள் மூலம் இடம்பெற்று வருகிறது.

**அட்டவணை 02: மஹர், கைக்கூலி, நன்கொடை போன்றவற்றின் தன்மை**

| வகைகள் | மஹர் | வீதம் | கைக்கூலி | வீதம் | நன்கொடை | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| பணம் | 49 | 37.69% | 8 | 6.15% | - | - |
| தங்கம் | 29 | 22.30% | 5 | 3.84% | 19 | 14.61% |
| வாகனம் | - | - | 4 | 3.07% | - | - |
| நிலம் | - | - | 3 | 2.30% | 13 | 10% |
| மொத்தம் | 78 | 60% | 20 | 15.38% | 32 | 24.61% |

**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

இங்கு மஹரானது பெரும்பாலும் (37.69%) பணமாக வழங்கப்படுகிறது. அதாவது மணமகன் மணமகளுக்கு தன்னால் முடிந்த தொகையை மஹர் என்ற பெயரில் வழங்கி வருகிறார். திருமண சம்பிரதாயமாக நகைகள் வழங்கப்பட்டாலும் இது மஹராக கொள்ளப்படுவதில்லை. எனினும் குறிப்பிட்ட சிலர் (22.03%) மஹராக தங்க ஆபரணங்களை வழங்கும் பழக்கமும் காணப்படுவதை அறியமுடிகிறது. கைக்கூலியை எடுத்து நோக்கின் கைக்கூலி பெறுவது முஸ்லிம் திருமணத்தில் தடுக்கப்பட்ட ஒன்றாகும். எனினும் பெற்றோர் பெண்மக்களை மணமுடித்து வைப்பதற்காக கைக்கூலி வழங்குகின்றனர். நிலம், வாகனம், தங்கம், பணம் என பல வழிமுறைகளில் வழங்கப்படுகிறது. கைக்கூலியில் அதிகமாக முறையே பணம் (6.15%), தங்கம் (3.84%), வாகனம் (3.07%), நிலம் (2.30%), என வழங்கப்பட்டு வருகிறது. அடுத்து பெற்றோரது நன்கொடையை எடுத்து நோக்கும் போது வீடு, நிலம், தங்கம் போன்றவற்றை வழங்குகின்றனர். அதிகமாக தங்கம் (14.61%) அடுத்தபடியாக நிலமும் (10%) வழங்கப்படுகிறது.

### 5.2.4 ஒரு ரூபாவுடன் முடிவடையும் மஹர் தொகை

ஆய்வுப் பிரதேசத்தில பெரும்பாலான திருமணங்களில் மஹர் தொகை ஒரு ரூபாவுடன் முடிவடைவதாக அமைகிறது. அவை பின்வரும் அளவுகளில் அமைந்துள்ளன.

**அட்டவணை 03: ஒரு ரூபாவுடன் மஹர் முடிவடையும் தொகை**

| மஹர் தொகை | ரூ. 1 உடன் முடிவடைகிறது | ரூ. 1 உடன் முடிவடையவில்லை |
|---|---|---|
| 101-1000 | 3.07% | - |
| 1001-5000 | 6.15% | - |
| 5001-10000 | 56.92% | - |
| 10001-50001 | 16.92% | - |
| 50001-100000 | - | 7.69% |
| 100001ற்கு மேல் | - | 9.23% |
| மொத்தம் | 83.06% | 16.92% |

**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

இந்த வகையில் மஹர் தொகை ஒரு ரூபாவுடன் முடிவடையும் திருமணங்கள் 83.06% காணப்பட்டன. அதாவது உதாரணமாக ரூபா 101, 1001, 5001, 10,001 என அமைவதாகும். இத்தொகையில் குறைந்தளவிலான மஹர் தொகைகள் அதிகமாக ஒரு ரூபாவில் முடிவடைகின்றது. தங்க நகைகள் மஹராக வழங்கப்படும் போதும் மஹர் தொகை கூடுதலாக வழங்கப்படும் போதும் இது இந்நிலை பெறும்பாலும் அவதானிக்கப்படுவதில்லை. இதனை மேற் குறிப்பிட்ட அட்டவணை குறித்து நிற்கிறது. எனவே ஆய்வுப்பிரதேசத்தில் மஹர் ரூபா 1 இல் முடிவடைதனை பெரும்பாலான திருமணங்களில் அவதானிக்க முடிகிறது.

### 5.2.5 மஹர் நடைமுறைகள்

திருமணம் என்பது இருமனங்களின் சங்கமம். இஸ்லாமிய திருமணத்தைப் பொருத்தவைரயில் மஹர் கட்டாயமானதொரு அம்சமாகும். ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் தொடர்பான நடைமுறைகள் பகுப்பாய்வுக்கு உற்படுத்தப்பட்டபோது பின்வரும் முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**அட்டவணை : 4.17 மஹர் தொடர்பான நடைமுறைகள் பற்றிய விபரம்**

| மஹர் நடைமுறைகள் | நபர்கள் | சதவீதம் |
|---|---|---|
| மஹர் கேட்டேன் | - | - |
| மஹர் கேட்கவில்லை | 130 | 100% |
| மஹர் கேட்கப்பட்டது | 05 | 3.84% |
| மஹர் கேட்கப்படவில்லை | 125 | 96.15% |


**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

பெண்கள் மஹர் பெறுவது உரிமையாகக் கொண்டிருந்தப் போதிலும் தமக்கு வேண்டிய மஹர் தொகையைக் கேட்பதில்லை. இதற்கு காரணம் பெண்களிம் மஹர் பற்றிய விழிப்புணர்வு காணப்படாமையும் கருத்துச் சுதந்திரமின்மையும் ஆகும். இதனால் ஆய்வுக்குற்படுத்திய 130 (100%) பேரும் மஹர் இவ்வளவு பெறுமதியான மஹர் தேவை எனக் கேட்கவில்லை என்பதாக விடையளித்துள்ளனர். அடுத்து மஹரானது பெண்களின் உரிமையாகக் கொள்ளப்பட்ட போதிலும் ஆண்கள் மஹர் தொடர்பில் தீவிர கரிசனைக் காட்டுவதில்லை. இதனால் பெரும்பாலான ஆண்கள் தாம் மணந்துகொள்ளப்போகும் பெண்களிடம் மஹர் தொகை பற்றி கேட்பதில்லை. எனினும் விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஆண்கள் மஹர் தொகை பற்றிக் கேட்கின்றனர். மஹர் தொகை பற்றி தம்மிடம் கேட்கப்படுவதாக 5 (3.84%) பெண்களும் மஹர் தொகை தொடர்பாக தம்மிடம் கேட்கப்படவில்லையென 125 (96.15%) பெண்களும் விடையளித்துள்ளனர். எனவே ஆய்வுப் பிரதேசத்தில் மணப்பெண் மணந்துகொள்ளப்போகும் மணமகனிடம் தான் விரும்பிய மஹர் தொகையை வேண்டிக்கொள்ளவுமில்லை, தான் விரும்பும் மஹர் தொகை பற்றி அவள் மணமகனால் கேட்கப்படவுமில்லை என்பது பெரும்பாலானோரது நிலைப்பாடாகும்.

### 5.2.6 மஹர் வழங்கப்படும் சந்தர்ப்பம்

ஆய்வுப் பிரதேசத்தில் பின்வரும் சந்தர்ப்பங்களில் மஹர் வழங்கிவைக்கப்படுகிறது.

**வரைபடம்: 01 மஹர் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்**




**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

விவாகப் பதிவு மற்றும் நிகாஹ் என்பவற்றுக்காக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வில் பெருமபாலும் மணமகன் மணமகள் வீட்டாரிடம் மஹர் தொகையை கையளிப்பார். இது திருமணப்பதிவேட்டிலும் பதிந்துகொள்ளப்படும். இவ்வாறு 94 (72.30%) திருமணங்களில் இடம் பெற்றுள்ளது. குறைவாக மஹர் வழங்கி விட்டு அதிகமாக பதியும் வழக்கமும் ஒரு சில திருமணங்களில் நடைபெற்றிருப்பதை குறிப்பிட முடியும். வலிமா என்பது மணமகன் வழங்கும் விருந்தாகும். இதன் போது மணமகன் மஹரை செலுத்தும் வழக்கமும் குறைந்தளவில் காணப்படுகிறது. 22 (16.92%) நபர்கள் இவ்வகையில் மஹரை வழங்கியுள்ளனர். ஆய்வுப்பிரதேசத்தில் மஹர் கொடுக்க வசதியற்றோர் திருமணத்தின் பின்பு மஹர் வழங்கும் வழக்கமும் காணப்படுகிறது. சுமார் 14 (10.76%) திருமணங்கள் இவ்வாறு இடம்பெற்றுள்ளன. எனவே ஆய்வுப் பிரதேசத்தில் விவாகப்பதிவு இடம்பெறும் போது மஹர் கையளிக்கப்படுகிறது என்பது புரந்துகொள்ளப்படக்கூடிய ஒன்றாகும்.

### 5.2.7 மஹர் தொகை யாரால் செலவிடப்படுகிறது?

பெறுபேறுகளின் படி, மஹர் எப்போதும் மனைவிக்காக, கணவனுக்காக, குடும்பத்துக்காக செலவிடப்படுகிறது.

**அட்டவணை: 04 மஹர் தொகை யாரால் செலவிடப்படுகிறது**

| மஹர் செலவிடப்படுவது | நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| மனைவிக்காக | 108 | 83.07% |
| கணவனுக்காக | 03 | 2.30% |
| குடும்பத்துக்காக | 19 | 14.61% |

**மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு**

மனைவியின் உரிமையாக மஹர் கொள்ளப்படுவதால் அவள் விரும்பிய படி செலவு செய்ய அனுமதியளிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். ஆய்வுப்பிரதேசத்தில் மனைவி தனக்குரிய தேவைகளை நிறைவேற்ற இத்தொகையைச் செலவிட்டு வருகிறாள். இதன் மூலம் தங்க ஆபரண வடிவத்தில் பாதுகாத்தல், ஆடைகள் அல்லது வீட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வங்கியிடல் ஆகிய வழிமுறைகளில் செலவிடப்படுகிறது. சுமார் 108 (83.07%) திருமணங்களில் மஹர் தொகை மனைவிக்காகச் செலவிடப்படுகிறது. மஹர் பெண்களுக்கு வழங்கப்பட்டாலும் மிகக் குறைந்தளவில் (2.30%) தமது கணவனின்

தேவைக்காகவும் அதாவது கணவனின் தொழிலுக்காக அல்லது கணவனின் பெற்றோருக்காக செலவிடப்படுகிறது. குடும்பத்தில் கணவனும் மனைவியும் சரி பங்கு வகிப்பதால் அனைத்து விடயங்களிலும் பங்கெடுப்பது முக்கியமானது. இவ்வகையில் சுமார் 14.61% திருமணங்களில் மனைவி தனது மஹரை குடும்பத்தின் தேவைக்காக செலவிடுகிறாள். வீட்டுக்குத் தேவையானப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பிள்ளைகளின் தேவைக்காகவும் செலவிடுகிறாள்.

#### 5.3.7 வழங்கப்பட்ட மஹர் தொகை ஆண்களிடம் இருத்தல்

குடும்பத்தில் கணவன், மனைவி என்பது கட்டிடத்தின் இரு தூண்களாகும். இவ்வகையில் மனைவி தான் பெற்ற மஹரை சுயவிருப்பத்தின் படி கணவனிடம் மீண்டும் கையளிக்கிறாள். பங்குபற்றுனர்களுள் 100% இவ்வாறான பழக்கத்தை உடையவர்களாவர். சுய விருப்பின்றி கையளிப்போர் எவரும் ஆய்வுப் பிரதேசத்தில் கண்டுகொள்ளப்படவில்லை.

## 5.0 முடிவுரை

ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் திருமணத்தில் கைக்கூலி, பெற்றோரின் நன்கொடை இடம்பெற்றாலும் பெரும்பாலும் மணக்கொடை வழங்கும் பழக்கம் காணப்படுகிறது. மேலும் இது பெரும்பாலும் பணமாக அல்லது தங்க நகைகளாக வழங்கப்படுகிறது. அத்துடன் மஹர் பற்றி ஆண்கள் பெண்களிடம் கலந்தாலோசிப்பதோ அல்லது பெண்கள் ஆண்களிடம் தமக்கு குறித்த தொகை வேண்டுமென்று கேட்பதோ வழக்கத்தில் இல்லை. மஹர் ஆண்களால் பெண்களுக்கு வழங்கப்பட்டதும் பெண்கள் தமக்குரிய தேவையை நிறைவேற்றிக்கொள்ளவே அதனைச் செலவிட வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். எனினும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் பெண்கள் தடக்குச் சொந்தமான மணக்கொடைப் பெறுமதியை ஆண்களுக்கு வழங்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. மேலும் இஸ்லாத்தில் மஹரானது பெண்களின் உரிமையாகக் கொள்ளப்பட்டாலும் ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் ஆண்களின் உரிமை எனும் கருத்துநிலை நிலவுகிறது. இப்பிரதேசத்தில் வாழும் ஆண்கள் தமது திருமணத்தின் போது தம்முடைய சொத்திலிருந்தே மஹரை செலுத்துகின்றனர் என்பது அவதானிக்கத்தக்கது.

இஸ்லாத்தில் மஹர் பெண்ணின் உரிமையாகும். அதன் தொகையை நிர்ணயிக்கும் உரிமையும் பெண்ணுக்குரியது. அத்துடன் சில இடங்களில் மஹர் தொகை குறைவாகக் கொடுக்கப்பட்டு கூடுதலான தொகை விவாகப் பதிவில் பதியும் வழக்கமும் காணப்படுகிறது. மணக்கொடையாக வழங்கப்படும் பொருள் பிரயோசனமளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். குறித்த பொருள் தான் வழங்க வேண்டும் என்ற எந்த வரையறையும் இஸ்லாத்தில் இல்லை. ஆனால் ஆய்வுப் பிரதேசத்தில் பணமும், தங்கமும் மஹராக கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்படுகிறது. இதனால் அதிகமாக மஹராக தங்கமும் பணமும் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்ஆய்வின் கண்டறியப்பட்ட மணக்கொடை நடைமுறைகளை இஸ்லாமியக் கோட்பாட்டுடன் ஒப்பிடும் போது, கெகிராவை மற்றும் பஹலகம பிரதேசங்களில் இடம் பெறும் மஹர் சில விடயங்களில் இஸ்லாத்திற்குறப்பட்ட வகையில் காணப்பட்டாலும் பெரும்பாலான விடயங்கள் இஸ்லாத்திற்கு முரணான வகையில் அமையப்பெற்றுள்ளது என்பது புரிந்துகொள்ளத்தக்கது. எனினும் அவை இஸ்லாமிய விதிகளுக்குறப்பட்டவை தான் என்ற நோக்கில் முஸ்லிம்களும் அந்த வழிமுறையைப் பின்பற்றுவதில் கரிசனையுடன் செயற்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## References


*சலீம், ஏ. ஆர். எம். (1992). கிழக்கிழங்கை முஸ்லிம்களின் கலியாணச்சடங்குகள். அக்கரைப்பற்று: ஹிரா பப்ளிகேசன்ஸ்.*

*மன்சூர், எம். ஏ. எம். (1993). முஸ்லிம் தனியார் சட்டம் - 01 திருமணம். மல்வானை: தாருல் அர்கம் பப்ளிகேசன்ஸ்.*

*சாஹுல் ஹமீத், எம். வை. (1994). மறை கூறும் மணக்கோலம். திருச்சி: ஹமீதிய்யா பதிப்பகம்.*

*யூசுப் அலி. (1994). இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள். காரைதீவு: ரேஸ்மா பதிப்பகம்.*

*கமாலுத்தீன் ஆலிம், வ. (1996). திருமணத்தின் சிறப்பு. சென்னை: ஸலாமத் பதிப்பகம்.*

*அமீன், எம். ஐ. எம். (2000). இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும். கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்.*

*ஜெயினுலாப்தீன், பீ. ஜே. (2000). இஸ்லாமிய திருமணம். மதுரை: தாமிய்யா புக் சென்டர்.*

*ஜமாலுதீன், எ. (2001). இஸ்லாத்தில் குடும்பவியல். சென்னை: புர்கான் பப்ளிகேசன்ஸ் ட்ரஸ்ட்.*

*முபாரக், எம். எஸ். எம். (2005). கல்யாணக் கடைத்தெரு. மக்மின் அமீன் பதிப்பகம்: மருதமுனை.*

*அப்துல் லதீப், எம். எம். ஏ. (2009). விவாகம். அக்கரைப்பற்று: ஜின்னா பப்ளிகேசன்ஸ்.*

*அனஸ், எம். எஸ். எம்., (2009). புத்தளம் முஸ்லிம்கள் வரலாறும் வாழ்வியலும். கொழும்பு: குமரன் புக் ஹவுஸ்.*

*முஹம்மது இப்னு முஸ்தபா. (2010). இஸ்லாமிய இல்லறம். சென்னை: சாஜிதா புக் சென்டர்.*

*ரஸ்மின், எம். சி. (2015). இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக நீதி. தெஹிவளை: ஹஸனாத் சேகு இஸ்ஸதீன்.*

*Moulana Moudoodi .in English Fzil Ahamed.(1983). The Laws of Marriage & Divorce in Islam. Kuwaith: Islamic Book Publishers.*

*Ashif Hussain. (2007). Sarandib – An ethnological study of the muslim of srilanka. Dehiwela: AJ prints.*

*Mohamed Shakir Ali. in English Mohamed Salim.(2010). Islamic concept of Nikkah. Mumbai: Makthabe Taiba.*

*Ashif Hussain. Jameel. S.H.M.(2011). The Muslim Heritage of Eastern Sri Lanka. Colombo: Muslim Women's Research & Action forum.*

*மன்ஸூர், எம். ஏ. எம். (1990). திருமண ஒப்பந்தம். இஸ்லாமிய சிந்தனை. பேருவளை. நுளிமிய்யா இஸ்லாமிய வெளியிட்டு பணியகம். பக்: 21-30*

*பழீல், எஸ். எச். எம். (2001). ஆடம்பர மோகமும் சமூக அழிவும். இஸ்லாமிய சிந்தனை. பேருவளை: ஜாமிஆ நளிமீய்யா. பக்: 8-10*

*ஹிஸாம், எம். ரீ. எம். (2002). அன்பளிப்புச் செய்வோமா?. உண்மை உதயம். பரகஹதெனிய: ஜமாஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹமதிய்யா. பக்: 20-22*

*மரினா தாஹா ரிபாய். (2004). திருமணமா? துலைவலியா?. அல்ஹஸனாத். கொழும்பு: ஜமாஅத்தே இஸ்லாமி. பக்: 21-22*

*றிஸ்வான், எம். ஜே. எம். (2007). இஸ்லாமிய பெண்களுக்கான சட்டங்கள் - 08 மகளிர் மட்டும். உண்மை உதயம். பரகஹதெனிய: ஜமாஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா. பக்: 3-5*

*சமீலா யூசுப் அலி. (2012). திருமணத்தின் தீய பழக்கங்கள். எங்கள் தேசம். கொழும்பு: ஜமாஅத்தே இஸ்லாமி. பக்: 39-41*

*S.J.D. 2007. Flirting With God in Western Secular Courts: Mahr in the West: International Journal of Law Policy and the Family> pp.1-28.*

*Kristen Cherry. 2001. Marriage and Divorce Law in Pakistan and Iran: The problem of Recoginition: Tulsa Journal of Comparative and International Law. Vol.8. Issue 2.*

*Shyamal Chowdhury Debdulal Mallick Prabal Roy Chowdury. 2017. Natural Shocks and Marriage Markets: Evolution of Mahr and Dowry in Muslim Marriage. IZA-Institute of Labor Economics.*